தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

சித்திரை 14, பவ— திருவள்ளுவர் ஆண்டு 2025

1994 ஏப்ரல் 27, புதன்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"உறுபொருளும் உல்கு பொருளும்தன் ஒன்னார்த்

தெருபொருளும் வேந்தன் பொருள்."

முறைப்படி வரிகள் மூலம் வரும் பொருள், சுங்க வரிகள் மூலம் வரும் பொருள், பகைவர்கள் செலுத்தும் திறை பொருள் ஆகியவை ஒரு அரசுக்கு உரிய பொருள்கள் ஆகும்.

1. வினாக்கள்— விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 401, திரு. என்.ஆர். சிவபதி, மாண்புமிகு சட்ட அமைச்சர்.

401—

இளம் வழக்கறிஞர்களுக்கு ஊக்கத் தொகை வழங்குதல்

** 9721—திரு. என். ஆர். சிவபதி:*

மாண்புமிகு சட்ட அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சட்டப் படிப்பை முடித்து வெளிவரும் இளம் வழக்கறிஞர்களுக்கு குறைந்தபட்சம் மூன்று ஆண்டுகளுக்கு ஊக்கத் தொகை வழங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

[1994 ஏப்ரல் 27

மாண்புமிகு திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி, சட்ட அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சட்டப் படிப்பை முடித்து வெளிவரும் இளம் வழக்கறிஞர்களுக்கு குறைந்தபட்சம் மூன்று ஆண்டுகளுக்கு ஊக்கத் தொகை வழங்கும் பொதுவான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. என். ஆர். சிவபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப் படிப்பு என்பது தற்போது ஒரு தனிப்பட்ட தொழில் கல்வி என்ற முறையில் 5 ஆண்டுக்காலம் சட்டப் படிப்பாகச் செயல்பட்டு வரும் சூழ்நிலையில், எம்.பி.பி.எஸ். படித்தவர்கள், ஹவுஸ் சர்ஜன் டியூட்டி செய்கிறபோது அளிக்கப்படுகின்ற ஸ்டைபண்ட் போலவோ அல்லது பி.ஈ., படித்தவர்கள் தொழிற்கூடங்களில் அப்ரென்டிஸ்ஸாக இருக்கிறபோது அளிக்கப்படுகின்ற ஸ்டைபண்ட் போலவோ சட்டப் படிப்பு முடித்தவர்களுக்கு ஸ்டைபண்ட் கொடுக்கின்ற வகையில் ஒரு உதவித் தொகை அளிக்கும் ஏற்பாட்டை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக இளம் வழக்கறிஞர்களுக்கு எந்த ஊக்கத் தொகையும் அளிக்கப்படுவது இல்லையே தவிர, மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பேக்வர்டு கிளாஸ், மோஸ்ட் பேக்வர்ட் கிளாஸ், டி-நோட்டிபைட் கம்யூனிட்டிஸ், ஆதி திராவிடர்கள் ஆகிய 4 பகுதிகளிலிருந்து வருகின்ற இளம் வழக்கறிஞர்களுக்கு இது வரையில் 500 ரூபாய் ஊதியமாகக் கொடுக்கப்பட்டு வந்தது கடந்த 18-11-1993 லிருந்து 750 ரூபாயாக உயர்த்தி, ஏறத்தாழ 17 பேர் சென்ற ஆண்டு பயன் பெற்றிருக்கிறார்கள், ஆதி திராவிட வழக்கறிஞர்கள். இந்த ஆண்டு 37 பேர் தற்போது பயிற்சி பெற்று வருகின்றனர்; அவர்களும் பயன்பெற்று வருகிறார்கள். இதனைப் போலவே பின் தங்கிய வகுப்பு – – பேக்வர்டு கிளாஸ், மோஸ்ட் பேக்வர்டு கிளாஸ், டி-நோட்டிபைட் கம்யூனிட்டி என்ற முறையில் 1992-93 ஆம் ஆண்டு 11 இளம் வழக்கறிஞர்களும், 1993-94 ஆம் ஆண்டில் 20 இளம் வழக்கறிஞர்களும், இந்த 750 ரூபாய் பெறுவதற்கு முதன் முதலாக மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள். அவர்கள் அந்தப் பயனைப் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

திரு. என். ஆர். சிவபதி: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலுரையில் எங்களது இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின்

1994 ஏப்ரல் 27]

ஆட்சியில் நீதித் துறை சிறப்பாகச் செயல்பட்டுக்கொண்டிருக்கிற நல்ல நேரத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 17 ஆதி திராவிட இளம் வழக்கறிஞர்களும் மற்றும் 37, 11, 20 என்று கிட்டத்தட்ட நூறுக்குள்ளாக வழக்கறிஞர்கள் உதவித் தொகையைப் பெறுவதாகச் சொன்னார்கள். இன்றைய இளம் வழக்கறிஞர்களின் நிலை மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்கு தெரியும். நானும் ஒரு இளம் வழக்கறிஞன் என்ற முறையில் சொல்கிறேன். இன்றைக்கு எவ்வளவோ இளம் வழக்கறிஞர்கள் சீனியர் அட்வகேட்டுகளிடம் மாதச் செலவுக்குக் கூட பணம் கிடைக்காத நிலையில் இருக்கிறார்கள். ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதை மறு பரிசீலனை செய்து, இளம் வழக்கறிஞர்களின் போக்குவரத்துச் செலவிற்காவது பயன்படும் வகையில் ஒரு தொகை கிடைக்கும் வகையில் குறைந்தது 250 ரூபாயாவது அனைத்து வழக்கறிஞர்களுக்கு கிடைக்கச் செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட குறிப்பு அரசிடம் தற்போது எதுவும் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜெ. பாலகங்காதரன்.

முற்பகல் 10-05

திரு. ஜெ. பாலகங்காதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் இளம் வழக்கறிஞர்கள் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டு, கிழிந்த கோட்டு போட்டுக்கொண்டு வருகின்ற ஒரு சூழ்நிலை நிலவி வருகிறது. அதோடு மட்டுமல்லாமல் நானும் ஒரு வழக்கறிஞர் என்ற முறையில் நான் என் அனுபவத்தைச் சொல்கிறேன். மிக ஏழ்மையான நிலையில் இருக்கின்ற வழக்கறிஞர்களுக்குக் கூட அங்கே வழக்குகள் இல்லாமல் இருக்கின்ற நிலை இருப்பதால் ஒவ்வொரு காவல் நிலையத்திற்கும் லீகல் அட்வைஸர் என்ற ஒரு போஸ்ட்டைக் கிரியேட் பண்ணி, ஒவ்வொரு காவல் நிலையத்திற்கு மட்டுமல்லாமல், ஒவ்வொரு கலெக்டர் அலுவலகத்திற்கும் லீகல் அட்வைஸர் போஸ்ட்டைக் கிரியேட் பண்ணுவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: தலைவர் அவர்களே, வழக்கறிஞர் தொழில் என்பது 10 ஆண்டுகளாவது தியாகம் செய்ய வேண்டிய ஒரு தொழில் என்று கருதித்தான் அந்தத் தொழிலுக்கு வருகிறவர்கள் வருகிறார்கள். ஆகவே திறமை உள்ளவர்கள், ஆற்றல் உள்ளவர்கள், விவரம் உள்ளவர்கள் இன்றைக்கு நன்றாக சம்பாதித்துக்

கொண்டிருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆக ஒரு வகையான தியாக உணர்வு இருப்பவர்கள்தான் அந்தத் தொழிலுக்கு வந்து கொண்டிருக்கிறார்கள். வெற்றியும் பெறுகிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஓ.எஸ். அமர்நாத்.

திரு.ஓ.எஸ். அமர்நாத்: தலைவர் அவர்களே, சட்டப் படிப்பை முடித்துக்கொண்டு வருகின்ற இளம் வழக்கறிஞர்கள் அந்தந்த மாவட்டங்களில் இருக்கின்ற நீதிமன்றங்களிலே பயிற்சி பெறுகின்றார்கள். எப்படி மருத்துவத் துறையிலே ஹவுஸ் சர்ஜன் பயிற்சி பெறுகிறார்களோ அதே போன்று, கடந்த 4, 5 ஆண்டுகளாக 'Moot' என்ற ஒன்றை வைத்து சட்டப் படிப்பு படிக்கின்ற காலத்திலே நீதிமன்றங்களுக்குச் சென்று, அது சிவில் வழக்காக இருந்தாலும், கிரிமினல் வழக்காக இருந்தாலும் அந்த நீதித் துறை நடவடிக்கைகளைக் கவனித்து அதிலே பயிற்சி பெறுகிறார்கள். அவ்வாறு பயிற்சி பெறுகின்ற காலத்திலே அரசு உதவித் தொகை வழங்கலாம். அல்லது இளம் வழக்கறிஞர்கள் மூத்த வழக்கறிஞர்களிடம் பயிற்சி பெறுகின்ற நேரத்திலே அரசே நேரடியாக இளம் வழக்கறிஞர்களுக்கு உதவித் தொகை வழங்க முடியாத சூழ்நிலை இருந்தாலும், அரசு தனியாக ஒரு சட்டத்தைக் கொண்டு வந்து எந்த மூத்த வழக்கறிஞரிடம் இளம் வழக்கறிஞர் பயிற்சி பெறுகின்றாரோ அந்த மூத்த வழக்கறிஞர் இளம் வழக்கறிஞருக்கு அவருடைய அடிப்படைச் செலவுக்கான போக்குவரத்துச் செலவு, காப்பி செலவு, கோட்டு செலவு போன்ற செலவுகளுக்காக ஏதேனும் ஒரு குறிப்பிட்ட தொகையை ஒதுக்குவதற்கு இந்த அரசு முயற்சி செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: தலைவர் அவர்களே, ஒருகாலத்தில் பயிற்சி பெற்றுக்கொண்டிருந்தார்கள். அப்ரண்டிஸ்ஷிப் கோர்ஸ் இருந்த நேரத்திலே அது இருந்தது. இப்போது அதுவே இல்லை. நேரடியாக சட்டக் கல்லூரியிலே படித்து நேராக நீதிமன்றத்திற்கு வழக்கறிஞர்கள் சென்று கொண்டிருக்கிறார்கள். எனவே அந்தப் பிரச்சினை எழவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய வேண்டுகோளுக்கிணங்க வினா எண் 420 தற்போது எடுத்துக்கொள்ளப்படுகிறது.

வினா எண் 420, டாக்டர் எஸ். சுந்தரராஜ், மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத் துறை அமைச்சர்.